1981 மே 5]

திலே இருக்கின்ற அரசு போக்குவரத்துக் கழகத்தினுடைய பணி மனைகளில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளை நிறுத்துவதற்கு உதவி செய்யவேண்டுமென்று அரசாங்கம் அவர்களுக்கு உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அந்தந்த போக்குவரத்துக் கழகத்திற்கு என்று தனித்தனி பணி மனைகள் இருப்பதுதான் சரியாக இருக்கும், எந்தவிதமான தவறும் நடக்காமல் இருக்கும். தற்போது பெரிய பழுதுகள் ஏற்பட்டுவிட்டால் அதை அவர்கள் செய்யவேண்டுமென்று ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் நாம் சொல்லியிருக்கிறோம். அது நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்கு வராதது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, நேற்றைய தினத்தைப் போலவே இன்றைக்கும் இந்த மாமன்றத்தினுடைய பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சபைக்கு வரவில்லை. இன்றைக்கும் நாளைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மானியமான காவல் துறை மானியம் வர இருக்கிறது. ஆனால் செய்தி ஏடுகளிலே பார்க்கிறோம், இந்தச் சட்டசபை கூட்டத் தொடர் முடியும் வரையில் அவர்கள் கலந்துகொள்வதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்கள் இல்லாமல் இந்தச் சபைக் கூட்டம் நடக்குமானால் அது முழுமை பெற்றதாக நான் கருதவில்லை. அவர்கள் கலந்து கொள்ளாதது குறித்து தங்களுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி மீண்டும் அவர்கள் கலந்துகொள்ளக்கூடிய வகையிலே சூழ்நிலையை உருவாக்குவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தாங்கள் நேற்று இந்த அவையிலே அறிவித்து இருக்கிறீர்கள். பிரதான எதிர்க்கட்சியாக விளங்குகிற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அலுவல் ஆய்வுக் குழுவைச் சேர்ந்த எல்லாத் தலைவர்களும் கலந்தாலோசித்

தார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் இந்த அவைக்கு ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். ஆகவே உரிமைக் குழுதான் அதைப் பரிசீலித்து உண்மை நிலையை அறிந்து அறிக்கை அனுப்புகிற தன்மையில் அந்த அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதைத் தவிர வேறு எதுவும் செய்வதற்கு இல்லை. நானாக எதுவும் செய்வதற்கு இல்லை என்று தெளிவாகச் சொல்லி இந்த அவையிலே தாங்கள் அறிவித்திருக்கிறீர்கள்.

இந்த அவையில் உள்ள எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் எல்லோரும் சேர்ந்து மாண்புமிகு பேரவைத் தலைவரின் அதிகாரத்திற்குட்பட்டு அவர்கள் தெரிவித்துவிட்டதன் காரணமாக தாங்கள் எடுத்த முடிவிற்கிணங்க அதற்கு ஒத்துழைப்புத் தருகின்ற முறையில் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த அவைக்கு வரவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அப்படி அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தெரிவித்தார்களென்ற கருத்தை மாண்புமிகு தலைவர் இந்த அவையிலே தெரிவித்து செய்தித் தாள்களிலே வந்தது. இவ்வளவு வந்ததற்குப் பிறகு அவர்கள் ஒரு முடிவை எடுக்கிறார்கள், இந்தத் தொடர்கூட்டம் முழுவதும் கலந்துகொள்வதில்லையென்று. அப்படி எடுக்கிற முடிவை உடையவர்களை நாம் வற்புறுத்த இயலாது. கேட்டுக்கொள்ளலாம், வாருங்கள் என்று சொல்லலாம். இந்த அவையிலே இருக்கின்ற அத்தனை கட்சிக்காரர்களுடைய விருப்பம் என்று தெரிவிக்கலாம். இந்தக் கட்டங்கள் எல்லாம் முடிந்துவிட்டதற்குப் பிறகு அவர்கள் இந்த கூட்டத் தொடர் முழுவதும் கலந்துகொள்வதில்லையென்று தீர்மானம் செய்திருப்பதாகப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆகவே அவர்களை வற்புறுத்த முடியாது வந்துதான் தீர வேண்டுமென்று. அவர்கள் வராத நிலை வரையிலும் நாம் இந்த அவையை நடத்துவதற்கு இல்லை என்றும் நாம் சொல்லமுடியாது. அவை நடந்துகொண்டுதான் இருக்கும் முறைப்படி.

இப்போதும் நாம் அவர்களுக்குச் சொல்லலாம். அவர்கள் கலந்து கொண்டு ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்று இங்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் சொன்ன கருத்துக்கிணங்கவும், மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் தெரிவித்த கருத்துக்கிணங்கவும் இப்போதும் வேண்டுமானாலும் வேண்டுகோள் விடலாம், வந்து கலந்துகொள்வதுதான் முறை. கலந்துகொண்டு, ஜனநாயக முறைப்படி தங்களுடைய பங்கைச் செலுத்த வேண்டுமென்று இப்பொழுதும் நாம் கேட்டுக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—அவை முன்னவரவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு நான் ஒன்றும் தனியாக விளக்கம் அளிக்க வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.